# FIRST INFORMATION REPORT

# முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(~~குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 154 இன் கீழ்~~)

C 8213048

1. District மாவட்டம் : நாமக்கல்
   PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு, நாமக்கல்
   Year ஆண்டு : 2024
   FIR No. மு.த.அ. எண் : 1/AC/2024
   Date நாள் : 14.8.2024

2. (i) Act சட்டம் : The Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள் : 7-A
   (ii) Act சட்டம் : — Sections பிரிவுகள் :
   (iii) Act சட்டம் : — Sections பிரிவுகள் :
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.08.2024
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை
   Time Period நேர அளவு : மாலை 17.30 மணிக்கு முன்பு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.08.2024
   Time நேரம் : பகல் 14.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Volume-III 14.08.2024
   Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : 12.08.2024 அன்று திடீர் தணிக்கையின் போது கிடைக்கப் பெற்ற தகவலின் மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 3 கி.மீ கிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : அரசு பள்ளி மாணவர் விடுதி (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) வளாகத்தில் உள்ள அலுவலக அறை, தில்லைபுரம், நாமக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : தே. சுபாஷினி
   (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் : திரு. முருகேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 1988
   (d) Nationality : நாட்டினம் : இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation : தொழில் : துணை காவல் கண்காணிப்பாளர்.
   (g) Address : முகவரி : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. S. நல்லதம்பி (வயது-53) த/பெ. செங்கோடன், காப்பாளர், அரசு பள்ளி மாணவர் விடுதி (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை), நாமக்கல், அமைவிடம் அரசு மேல்நிலைப் பள்ளி (தெற்கு) வளாகம், தில்லைபுரம், நாமக்கல் மற்றும்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : 7 நபர்கள் (முழு விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Form-91 நாள்: 14.08.2024-ன் நகல் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
சமர்ப்பிக்கப் படுகிறது:

தனித்தாளில் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M.K. ராமச்சந்திரன் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு உ.ந.க.பிரிவு, நாமக்கல் காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/8/2024 | 14/8/24
--- | ---
14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.08.2024/15-30 மணி

Name: பெயர் மு. சுபாஷினி
Rank: நிலை ......................No. எண் ..........
துணை காவல் கண்காணிப்பாளர்,
உ.ந.க. பிரிவு, நாமக்கல்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.4/AC/2024, u/s. 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,**

**எதிரிகளின் பட்டியல்:**

1) திரு.S.நல்லதம்பி (வயது-53/2024), த/பெ.செங்கோடன், காப்பாளர், அரசு மாணவர் விடுதி (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை), நாமக்கல், அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகம் (தெற்கு), நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.2/419, அன்பு நகர்-2, சின்னமுதலைப்பட்டி, நாமக்கல் மாவட்டம்).

2) திரு.A.K.கார்த்திக் (வயது-46/2024), த/பெ.கருணாநிதி, காப்பாளர், அரசு மாணவர் விடுதி (மி.பி.ந.), திம்மநாயக்கன்பட்டி, அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகம், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.200-3/431, 4-வது தெரு, அண்ணாநகர், பொன்னம்மாபேட்டை, சேலம் மாவட்டம்).

3) திரு.K.கதிர்வேல் (வயது-60/2024), த/பெ.கருப்பண்ணன், காப்பாளர், அரசு மாணவர் விடுதி (பி.ந.), தோ.ஜேடர்பாளையம், அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகம், ஜேடர்பாளையம், நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.2/10, வன்னியர் தெரு, வடுகம் முனியப்பம்பாளையம் அஞ்சல், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்).

4) திருமதி.R.உமாராணி (வயது-44/2024), க/பெ.தனசேகரன் (லேட்), அரசு மாணவியர் விடுதி (பி.ந.), வையப்பமலை, அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.13/23, மாரியம்மன் கோவில் தெரு, R.புதுப்பட்டி, இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்).

5) திரு.P.ராஜகோபால் (வயது-56/2024), த/பெ.பெரியசாமி, காப்பாளர், அரசு கல்லூரி மாணவர் விடுதி (பி.ந.), இலத்துவாடி, நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.3/39, வள்ளுவர் நகர், வளையப்பட்டி அஞ்சல், மோகனூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்-637020)

6) திரு.A.சுரேஷ் (வயது-38/2024), த/பெ. அண்ணாமலை, காப்பாளர், அரசு மாணவர் விடுதி (மி.பி.ந.), மல்லசமுத்திரம் மற்றும் காப்பாளர் பொறுப்பு (பி.ந.), விட்டமபாளையம், அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகம், விட்டமபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.471, கணபதி கார்டன், பிள்ளையார்காட்டூர், பள்ளிபாளையம் அக்ரஹாரம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்).

7) திருமதி.R.யசோதா (வயது-55/2024), த/பெ.ராமானுஜம், காப்பாளர், அரசு கல்லூரி மாணவியர் விடுதி (மி.பி.ந.), ஆண்டகலூர்கேட், திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி வளாகம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.97/1, காட்டூர் ரோடு, இராசிபுரம், நாமக்கல்).

8) திரு.S.ஜெகதீஸ்வரன் (வயது-35/2024), த/பெ. சித்தன், காப்பாளர், அரசு மாணவர் விடுதி (மி.பி.ந.), திருச்செங்கோடு மற்றும் காப்பாளர் பொறுப்பு (மி.பி.ந.), இராமாபுரம், அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.1/284, செங்குந்தர் நகர், தி.கைலாசம்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்).

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.4/AC/2024, u/s. 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-12 இன் விபரம்:-**

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் 12.08.2024-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 17.30 மணி முதல் 13.08.2024-ஆம் தேதி அதிகாலை 01.30 மணி வரை நாமக்கல் மாவட்டம், நாமக்கல் அரசினர் மேல்நிலைப்பள்ளி (தெற்கு), பள்ளி வளாகத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வரும் தில்லைபுரம் இரண்டாவது குறுக்கு தெருவில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் தங்கும் விடுதி (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) வளாகத்தில் உள்ள அலுவலக அறையில் வைத்து, மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கைகளில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 14.08.2024-ஆம் தேதி புதன்கிழமை பகல் 14.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.4/AC/2024, u/s. 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் டவுன், மோகனூர் ரோட்டில் அமைந்துள்ள நாமக்கல் அரசினர் மேல்நிலைப்பள்ளி (தெற்கு), பள்ளி வளாகத்தின் ஒரு பகுதியில் செயல்பட்டு வரும் தில்லைபுரம் இரண்டாவது குறுக்கு தெருவில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் தங்கும் விடுதி (பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை) வளாகத்தில் உள்ள அலுவலக அறையில் 02.08.2024-ஆம் தேதி நாமக்கல் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ச.பாலகிருஷ்ணன் அவர்கள் பணிமாறுதலில் சென்றதன் அடிப்படையில் ஏற்கனவே அவர் அறிவுரையின் பேரில் அவருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக மேற்படி அரசு மாணவர் தங்கும் விடுதிகளில் பணிபுரியும் வார்டன்கள் கையூட்டு தொகை வசூல் செய்வதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணைக் காவல் கண்காணிப்பாளராகிய நான் அரசு சாட்சிகள் 1) திரு.பா.செந்தில்குமார், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் மற்றும் 2) திருமதி.வை.புஷ்பா, வருவாய் ஆய்வாளர், நல்லிபாளையம் பிர்க்கா, நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவினருடன் மேற்படி விடுதி அலுவலக அறைக்கு மாலை சுமார் 17.30 மணிக்கு வரப்பட்டது. அந்த அலுவலக அறையில் அமர்ந்திருந்த அலுவலர்களிடம் நான் திடீர் சோதனைக்கு வந்த விபரத்தை தெரிவித்தேன். அந்த அறையில் இருந்த நபர்களைப் பற்றி நான் தனித்தனியாக விசாரித்தேன். அவர்களில் அரசு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியர் விடுதி

காப்பாளர்கள் 1) திரு.செ.நல்லதம்பி-நாமக்கல், 2) திரு.க.கார்த்திக்-திம்மநாய்க்கன்பட்டி, 3) திரு.கே.கதிர்வேல்-தொப்பப்பட்டி ஜேடர்பாளையம், 4) திருமதி.ஆர்.உமாராணி-வையப்பமலை, 5) திரு.பெ.ராஜகோபால்-லத்துவாடி, 6) திரு.அ.சுரேஷ்-மல்லசமுத்திரம், 7) திருமதி.ஆர்.யசோதா-ஆண்டகலூர்கேட், 8) திரு.எஸ்.ஜெகதீஸ்வரன்-திருச்செங்கோடு, 9) திரு.என்.முருகேசன்-ஏழூர், 10) திருமதி.க.மேனகா-திருச்செங்கோடு, 11) திருமதி.கண்ணகி-நாமக்கல், 12) திரு.கே.ஜெயவேல்-செல்லப்பம்பட்டி, 13) திரு.எஸ்.சித்தேஸ்வரன்-எலச்சிபாளையம், 14) திரு.எஸ்.தங்கவேல்-ஆண்டகலூர்கேட் மற்றும் 15) திரு.ஏ.விஷ்ணுகுமார்-காரைகுருச்சிபுதூர் ஆகியோர் ஆஜரில் இருந்தனர். மேலும் அவர்கள் விடுதி வளர்ச்சி முன்னேற்பாடு ஆய்வு, வரவு, செலவு கணக்கு சரிபார்த்தல், எதிர்கால பார்வை விவாதித்தல் பற்றி விவாதிக்க இன்று கூட்டம் நடைபெற்று வருவதாகவும் அந்த கூட்டத்திற்கு எங்கள் அனைவரையும் நாமக்கல் மாவட்ட காப்பாளர் ஆசிரியர் சங்க தலைவர் மேற்படி திரு.அ.சுரேஷ் அவர்கள் செல்போன் குருஞ்செய்தி மூலமாக அழைப்பு விடுத்ததாகவும், அவர் தலைமையில் கூட்டம் நடைபெறுவதாக தெரிவித்தனர். மேலும் பிற்படுத்தப்பட்ட காப்பாளர் சங்க மாநில துணைத்தலைவர் மேற்படி திரு.எஸ்.தங்கவேல், மாவட்ட செயலாளர் திரு.சி.ஜெகதீஸ்வரன் மற்றும் பொருளாளர் திரு.க.கார்த்திக் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாக தெரிவித்தனர். நான் அவர்களிடம் என்னையும், மேற்படி அரசு சாட்சிகள் மற்றும் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் திடீர் சோதனை மேற்கொண்டேன். அப்போது விடுதியின் முன்பக்கம் உள்ள சிறிய விளையாட்டு மைதானத்தில் சில மாணவர்கள் விளையாடிக் கொண்டும், விடுதி முன்பக்க வராந்தாவில் அமர்ந்து படித்துக் கொண்டும் இருந்தனர். பின்னர் மேற்படி விடுதி காப்பாளர் திரு.செ.நல்லதம்பி அவர்களிடம் உள்ள தொகை குறித்து கேட்டபோது, அவர் சட்டையின் இடதுபக்க மேல் பாக்கெட்டில் தனது இரண்டு அடையாள அட்டைகள் மற்றும் ஓட்டுனர் உரிமத்துடன் சேர்த்து வைத்திருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் எவ்வளவு தொகை உள்ளது என்று அவரிடம் கேட்டபோது, அதற்கு அவர் அந்த கற்றைகளில் எவ்வளவு தொகை உள்ளது என்று கூற இயலவில்லை. பின்னர் அந்த கற்றையின் முதலாவதாக இருந்ததை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 9 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.4,500/-ம், 7 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.1400/-ம், 1 நூறு ரூபாய் நோட்டு ஆக ரூ.100/-ம் ஆக மொத்தம் ரூ.6,000/- இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்

கொள்ளும்படியாக இல்லாததால் மேற்படி தொகை ரூ.6,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் தொடர் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கைகளில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் மற்றொரு கற்றையில் தொகை மொத்தம் ரூ.220/- இருந்தது பற்றி கேட்டபோது, அவர் தனது அன்றாட செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.220/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரிடம் வேறு ஏதாவது தொகை உள்ளதா என்று கேட்டபோது, அவர் அலுவலக ஸ்டோர் ரூமில் மாணவர்கள் தன்னிடம் பாதுகாப்பிற்காக கொடுத்து வைத்துள்ள தொகை உள்ளதாக தெரிவித்து, இரும்பு பீரோவிலிருந்து 40 பக்க நோட்டில் வைக்கப்பட்டிருந்த தொகையை ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.1,900/- இருந்தது. அந்த தொகை தொடர்பாக மேற்படி 40 பக்க நோட்டில் எழுதப்பட்டிருந்த விபரங்கள் சரிபார்க்கப்பட்டு, சம்மந்தப்பட்ட மாணவர்களிடம் விசாரித்த போது தங்களின் பாதுகாப்பிற்காக தொகைகளை விடுதி காப்பாளர் திரு.செ.நல்லதம்பியிடம் கொடுத்து வைத்துள்ளதாக தெரிவித்தனர். எனவே மேற்படி 40 பக்க நோட்டுடன் மேற்படி தொகை ரூ.1,900/- விடுதி காப்பாளர் திரு.நல்லதம்பியிடம் சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு அலுவலரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் கார்த்திக் என்றும், தான் திம்மநாய்க்கன்பட்டி அரசு பள்ளி மாணவர் விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, அவர் வைத்திருந்த இ.செந்தாமரைச் செல்வி, M.A. B.Ed., போதகக் காப்பாளினி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாமக்கல் மாவட்டம் என்ற பெயர் பதிந்த கருப்பு நிற கைப்பையில் வைத்திருந்த தொகையை ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 39 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.19,500/-ம், 100 நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.10,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் தொகை வைத்துள்ளதாக மட்டும் தெரிவித்தார். ஆனால் என்ன காரணத்திற்காக அந்த தொகை வைத்துள்ளார் என்ற விவரம் எதுவும் கூறவில்லை. எனவே மேற்படி தொகை மொத்தம் ரூ.29,500/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரிடம் வேறு தொகை ஏதாவது உள்ளதா என்று கேட்டபோது, அவர் தனது பேண்டின் பின்பக்கம் வைத்திருந்த பிரவுன் கலர் மணிபர்சில் இருந்த தொகையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள்

முன்னிலையில் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.1,550/- இருந்தது பற்றி கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.1,550/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு அலுவலரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் கதிர்வேல் என்றும், தான் தொப்பப்பட்டி ஜேடர்பாளையம் அரசு பள்ளி மாணவர் விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, அவர் தனது பேண்டின் வலதுபக்க பாக்கெட்டில் இருந்து கற்றையாக தொகையை ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 70 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.35,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் சரியான விளக்கம் சொல்லாததால் அந்த தொகை ரூ.35,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரிடம் வேறு தொகை ஏதாவது உள்ளதா என்று கேட்டபோது, அவர் தனது பேண்டின் இடதுபக்க பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் இருந்து தொகையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.960/- இருந்தது பற்றி கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.960/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு பெண் அலுவலரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் உமாராணி என்றும், தான் வையப்பமலை அரசு பள்ளி மாணவியர் விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார், அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, அவர் வைத்திருந்த ஸ்ரீகல்யாண் ஜீவல்லரி, A/C இராசிபுரம், 637408 என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்த கருப்பு நிற கைப்பையில் நடுப்பகுதியில் இருந்த ஜிப்பில் இருந்து கற்றையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 16 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.8,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் அம்மாவின் மருத்துவச் செலவிற்காகவும், இரண்டு சக்கர வாகனம் ரிப்பேர் செய்வதற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாததால் அந்த தொகை ரூ.8,000/-ம் அரசு சாட்சிகள்

முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரிடம் வேறு தொகை ஏதாவது உள்ளதா என்று கேட்டபோது, அவர் அந்த கைப்பையின் சைடு ஜிப்பில் இருந்து கற்றையாக தொகையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.490/- இருந்தது பற்றி கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.490/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். மேலும் அவர் தனது செல்போன் கவரில் வைத்திருந்த தொகை ஒரு கற்றையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.480/- இருந்தது பற்றி கேட்டபோது, அவர் தனது அன்றாட செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.480/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு அலுவலரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் ராஜகோபால் என்றும், தான் லத்துவாடி அரசு கல்லூரி மாணவர் விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து கற்றையாக வைத்திருந்த தொகையை ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 5 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.2,500/-ம், 2 இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.400/-ம், 6 நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.600/-ம், 5 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.250/-ம், 11 இருபது ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.220/-ம், 3 பத்து ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.30/-ம், ஆக மொத்தம் ரூ.4,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் விடுதி செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.4,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரிடம் வேறு தொகை ஏதாவது உள்ளதா என்று கேட்டபோது, அவர் தனது சட்டையின் மேல்பாக்கெட்டில் இருந்து ரூ.30/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகை பற்றி கேட்டபோது, அவர் தனது அன்றாட செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.30/-ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு அலுவலரிடம்

விசாரிக்க, அவர் தனது பெயர் சுரேஷ் என்றும், தான் மல்லசமுத்திரம் அரசு பள்ளி மாணவர் விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் அவர் கூட்டத்திற்கான குருஞ்செய்தியை தான் 12.08.2024-ஆம் தேதி மதியவாக்கில் அனைவருக்கும் அனுப்பியதாகவும், அதன்பேரில் விடுதி அலுவலர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும் கூட்டம் தொடர்பான தீர்மான பதிவேடு மாவட்ட செயலாளர் திரு.ஜெகதீஸ்வரன் எடுத்து வரவில்லை என்றும் கூறினார். மேலும் அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, முதலில் அவரிடம் எந்த ஒரு தொகையும் தான் வைத்திருக்கவில்லை என்று தெரிவித்தார். அதன்பிறகு அவர் அவர் வைத்திருந்த கைப்பையை அரசு சாட்சிகள் மூலம் சோதனை செய்த போது அந்த கைப்பையின் நடுஜிப்பில் ரூபாய் நோட்டுக்கள் இரண்டு கற்றைகளாக இருந்தது. அதில் முதலாவது கற்றையில் இருந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 20 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.10,000/-ம், மற்றொரு கற்றையில் 50 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.25,000/-ம் ஆக மொத்தம் ரூ.35,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் விடுதி செலவிற்காகவும், மின் கட்டணம் செலுத்துவதற்காகவும் வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.35,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அந்த கைப்பையின் முன்பக்க ஜிப்பில் இருந்து நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 20 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.10,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் விடுதி செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.10,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரிடம் ஏன் தாங்கள் முதலில் தொகை எதுவும் தன்னிடம் இல்லை என்று கூறினீர்கள் என்று கேட்டதற்கு தான் தவறுதலாக கூறிவிட்டேன் என்றும், மன்னித்துவிடுங்கள் என்றும், பயத்தினால் தன்னிடம் தொகை எதுவும் இல்லை என்று கூறியதாக தெரிவித்தார். மேலும் அவர் வைத்திருந்த மணிபர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.870/- இருந்தது. அந்த தொகை பற்றி கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.870/-ஐ அரசு

சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு பெண் அலுவலரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் யசோதா என்றும், தான் ஆண்டகலூர் கேட், அரசு பெண்கள் கல்லூரி விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, அவர் வைத்திருந்த காவி நிற கைப்பையில் நடு ஜிப்பில் இருந்து கற்றையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 68 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.34,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் விடுதியில் உள்ள போர்வெல் ரிப்பேர் ஆகிவிட்டது என்றும், அதை சரி செய்வதற்காகவும், விடுதி மாணவர்களுக்கு தண்ணீர் விலைக்கு வாங்கியதற்காக கொடுப்பதற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாததால் அந்த தொகை ரூ.34,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அந்த காவி நிற கைப்பையின் முன்பக்க ஜிப்பில் இருந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.170/- இருந்தது பற்றி கேட்டபோது, அவர் தனது சொந்த செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் அந்த தொகை ரூ.170/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுத்தேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்த மற்றொரு அலுவலரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் ஜெகதீஸ்வரன் என்றும், தான் திருச்செங்கோடு அரசு பள்ளி மாணவர் விடுதி காப்பாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் அவர் இன்றைய கூட்டத்திற்கு தேவையான தீர்மான பதிவேட்டை தான் வீட்டில் இருந்து எடுத்துவரவில்லை என்றும் கூறினார். பின்னர் அவரிடம் அவர் வைத்துள்ள தொகை பற்றி கேட்டபோது, அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கற்றையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப் பார்த்தபோது அதில் 16 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.8,000/-ம் இருந்தது. அந்த தொகை குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் விடுதிக்கு தேவையான சிலிண்டர் எடுப்பதற்காகவும், தனது மகன் பிறந்த நாள் புது துணி எடுப்பதற்காகவும் வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.8,000/-ம் அரசு சாட்சிகள் முன்னிலையில்

விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். இது தொடர்பாக அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கு ஆஜரில் இருந்த மற்ற அலுவலர்கள் 1) திரு.என்.முருகேசன்-ஏழுர் அரசு பள்ளி மாணவர் விடுதி காப்பாளர், 2) திருமதி.க.மேனகா-திருச்செங்கோடு அரசு மாணவியர் விடுதி காப்பாளர், 3) திருமதி.கண்ணகி-நாமக்கல் அரசு கல்லூரி மாணவியர் விடுதி காப்பாளர், 4) திரு.கே.ஜெயவேல்-செல்லப்பம்பட்டி அரசு மாணவர் விடுதி காப்பாளர், 5) திரு.எஸ்.சித்தேஸ்வரன்-எலச்சிபாளையம் அரசு மாணவர் விடுதி காப்பாளர், 6) திரு.எஸ்.தங்கவேல்-ஆண்டகலூர்கேட் அரசு ஆண்கள் கல்லூரி விடுதி காப்பாளர் மற்றும் 7) திரு.ஏ.விஷ்ணுகுமார்-காரைகுருச்சிபுதூர் அரசு பள்ளி மாணவர் விடுதி காப்பாளர் ஆகியோர்களை விசாரித்து அவர்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனையிடப்பட்டது. அவர்கள் தொகைகள் முறையே ரூ.1100/-, ரூ.660/-, ரூ.670/-, ரூ.850/-, ரூ.1,000/-, ரூ.110/-, ரூ.1000/- வைத்திருந்தனர். அந்த தொகைகள் பற்றி அவர்களிடம் கேட்ட போது அவர்கள் சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த தொகைகளை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்களிடமே திருப்பிக் கொடுத்தேன். அதன் பின்னர் அந்த விடுதி அலுவலக அறை மற்றும் ஸ்டோர் ரூம் ஆகியவைகளில் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனையிட்ட போது அங்கு கைப்பற்றக் கூடிய பணமோ, பொருளோ எதுவும் காணப்படவில்லை. மேலும் திடீர் சோதனையின்போது ஆஜரில் இருந்த மேற்படி 15 அலுவலர்களிடமும் விசாரணை செய்தபோது கடந்த 02.08.2024-ஆம் தேதி நாமக்கல் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ச.பாலகிருஷ்ணன் அவர்கள் பணி மாறுதலில் சென்றதைத் தொடர்ந்து ஏற்கனவே அவர் தெரிவித்ததன் பேரில் அவருக்கு கொடுப்பதற்காக தொகை ஏதாவது வசூல் செய்யப்பட்டதா என்று கேட்டபோது அதுபற்றி தங்களுக்கு தெரியாது என்று கூறினர். மேலும் திரு.நல்லதம்பி, காப்பாளர் அவர்களிடம் இந்த அலுவலகத்திற்கென நிர்ணயம் செய்யப்பட்ட கொடிநாள் நிதி வசூல் இலக்கு பற்றி கேட்டபோது, அவர் கொடிநாள் நிதி வசூல் இலக்கு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/எதிரிகள் உரிய விளக்கம் அளிக்காததாலும், அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்றும், எதிரிகள் மேற்படி நாமக்கல் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ச.பாலகிருஷ்ணன் அவர்கள் பணி மாறுதலில் சென்றதைத் தொடர்ந்து ஏற்கனவே அவர் தெரிவித்ததன்

பேரில் அவருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கக்கூடும் என்றும், எதிரிகளால் கொண்டு வரப்பட்ட தொகை அவர்களால் முறையற்ற வ்கையில் பெறப்பட்டு கொண்டு வந்திருக்கக்கூடும் என்றும் சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்தரவு பெற்று, மேற்படி எதிரிகள் 1 முதல் 8 வரையிலானவர்கள் மீது இன்று 14.08.2024-ஆம் தேதி புதன்கிழமை பகல் 14.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.4/AC/2024, u/s. 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை மாண்பமை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

14/8/24.

(மு. சுபாஷிணி)
துணைக் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.